# ‘கடல் அடி’ நாவல் ஓர் ஆய்வு

**வி. ராஜேஸ்வரி**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

கடற்புற மீனவர்களின் முரட்டுத்தனம் நிறைந்த வாழ்வு, அந்த வாழ்வில் எழும் மோதல்கள், மோதல்களில் பற்றி எரியும் வெறி, அந்த வெறியினுள்ளே பொங்கி எழுகிற மீனவர்களுக்கேயுரிய தூய அன்பு, மானுட மாண்பு, ஆன்மப் பேரழகு இதை அருமையாக சித்தரிக்கிறது குறும்பனை சி.பெர்லின் என்பவரின் ‘கடல் அடி’ எனும் நாவல்.

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 4

**மாதம்:** மார்ச்

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

## ஆசிரியர் குறிப்பு

குறும்பனை சி.பெர்லின் 1996-ஆம் ஆண்டு முதல் சிற்றிதழ்களில் சிறுகதைகள் பல எழுதியுள்ளார். ‘கடலுக்குள்ளே கடலுக்குள்ளே’, ‘கடலின் கருவறையில்’ நீந்திக்களித்த கடல், கடல் தண்ணி கரிக்குது, கண்ணீர் சமுத்திரம் போன்ற சிறுகதை தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அந்த வகையில் நாவல் உலகில் இவருடைய முதல் முயற்சி இந்த ‘கடல் அடி’ நாவல் கடலையும், கடற்கரையையும், கடலோர மக்களையும் அவர்களின் தொழிலையும், கடலுக்குள்ளே நிகழும் சம்பவங்களையும் கடலோரக் கிராமங்களில் நிகழும் அடிப்படை வசதிகள் சார்ந்த உரிமை சார்ந்த பிரச்சனைகளையும் இலக்கிய உலகில் பதிவு செய்ய இந்நாவல் மூலம் முயன்று இருக்கிறார் ஆசிரியர்.

## கதை சுருக்கம்

மிக எளிமையான கதை. மீனவர்களின் வாழ்வியல் நிகழ்வுகளைச் சித்தரித்துள்ளார். இன்னாசி ஒரு பெருவீரன். அவன் பொது சமூகப் பிரச்சனைகளுக்காகக் குரல் கொடுக்கும் இளந்தாரித் தலைவன். ஆதிக்க சக்திகளால் அடக்கப்பட்ட மீனவ மக்களுக்காகப் போராடி அவர்களை காத்த தலைவன். தன் தோழர்களுடன் சேர்ந்து எந்த ஒரு செயலையும் செய்து காட்டும் சாதனை நாயகன். அவனின் சாதனையையும், வீரத்தையும் பார்த்து காதலித்தவள் நிர்மலா. வீட்டையே புறகணித்து இன்னாசியின் கரம் பற்றிய அன்பு காதலி. இவர்களின் காதலை மிக அழகாக வெளிப்படுத்தி காட்டினார் ஆசிரியர்.

ஒரே பஞ்சாயத்தாய் இருந்த ஊரை அரசியல் சதிகாரர்கள் மூன்றாய் உடைத்து மூன்று பஞ்சாயத்துக்குத் பிரித்துபோட்டு ஒப்படைத்தனர். இதனால் ஊரில் ஏற்பட்ட தண்ணீர் பிரச்சனை. பேருந்துபிரச்சனை, மின்சாரப்பிரச்சனை, மணல்பிரச்சனை பற்றியே இந்நாவல் பேசுகிறது. இப்பிரச்சனைகளுக்காக போராடி பல தீர்வுகளை தந்த இன்னாசியின் மனைவி நிர்மலாவை குழாயடி சண்டை காரணமாக பாத்திமாவின் கணவனான சேவியர் கன்னத்தில் அறைந்து விடுகிறார். இதை அறிந்த இன்னாசி சேவியரை கொலை செய்ய வேண்டும் என்று கொலை வெறியுடன் அவன் சென்ற கடலைப் பார்த்து கொண்டு கரையில் காத்திருக்கிறான். கொந்தளிப்பான நேரம். கடல் கோரத் தாண்டவம்

ஆடிக் கொண்டிருக்கிறது. சேவியர் கரையில் கால் வைத்ததும் அவனைக் கொல்ல வேண்டும் எனக்காத்து நிற்கிறான் இன்னாசி. "என்ன செய்வது என்று தெரியாமல் ஊர் மக்கள் கூ...கூ... எனக் கூவியபடி, கடற்கரையில் குவிந்து நிற்கிறார்கள்". கடலின் கோர அலைகளின் பிடியில் மாட்டிக் கொண்டு உயிர் பிழைக்கப் போராடிக் கொண்டிருந்த சேவியரைக் காக்க நினைத்த ஊர் மக்கள் பல முயற்சிகளில் ஈடுபட்டனர். இளைஞர்கள் பலரும் ஒன்றும் செய்ய முடியாமல் பதறினர். அலை சுழன்று சுழன்று அடிக்க சேவியரால் தாக்குபிடிக்க முடியவில்லை. அவன் கொஞ்ச கொஞ்சமாக மயக்கநிலையை அடைந்து தன் நீந்தும் முயற்சியை கைவிட்டு செயலிழந்து கொண்டிருந்தான். இதை கரையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த இன்னாசிக்குள் ஒரு வேகம் வந்தது.

**"ஒரே ஓட்டமாக ஓடி குதித்த இன்னாசியை கொஞ்ச நேரமாகக் காணவில்லை".**

கயிரோடு கடல் அலைகளை நோக்கிச் சென்று அலைகளுக்குள் மூழ்கினான். சேவியர் இருந்த பகுதியை மிக விரைவாக சென்றடைந்தான். சேவியரை தன் தோளில் தூக்கிக் கொண்டு கரையை அடைந்தான்.

**"இவன்லேசுல ஒண்ணும் ஆபத்துல மாட்டமாட்டான் அவ்வளவு தந்தேடம்(மனத்திடம்) உள்ள ஆவீரன் இன்னாசி"**

என அனைவராலும் பாராட்டப்பட்டான். பின் தலையை துவட்டிய படியே செல்வதாக கதை முடிந்துள்ளது.

**மீனவர்களின் வாழ்வும், போராட்டங்களும்**

மீன் பிடிப்பு தொழில் செய்வதற்காகவே கடற்கரைகளில் வீடுகளைக் கட்டி வாழ்ந்தார்கள். மீனவர்கள் கடற்கரையில்தான் வாழ முடியும்.

"வெள்ளப்பெருக்கம் வந்தா, புயலுஅடிச்சா, நிலநடுக்கம்வந்தா, பூகம்பம்வந்தா அது இயற்கைப்பேரழிவாம். ஆனா வருசம் தோறும் வந்து இப்பிடி ஒரு வரிசை வீட இழுத்திட்டுப்போய் ஆயிரக்கணக்கான மக்க மனுஷருக்க வாழ்க்கையையே அழிச்சுத இந்த கடல் கொந்தளிப்பு,கடலரிப்பும் இயற்கைப்பேரழிவு இல்லையாம். இது எங்க உள்ள நியாயம்?".

கடலும், கடற்கரையும் மீனவனுக்குச் சொந்தம் என்ற நினைப்பில் வாழ்ந்திருந்தவர்களின் குடியிருப்புகளை கடலே வந்து வாரிச் சுருட்டிக் கொண்டு போயிருக்கிறது. அந்த கடற்கரையை விட்டால் ஒரு சென்டு இடம் கூட மீனவனுக்குச் சொந்தமில்லை. நிலமெல்லாம் வேறு யாருடைய கைகளிலோ இருந்தது.

"நிலமற்ற சமுதாயமாக மீனவ சமுதாயம் உள்ளது. தன் சம்பாதியத்தில் பத்தில் ஒரு பங்கை வரியும் கூறுமாகக் கொடுத்துச்சேர்த்த பணத்தில் நிலம் வாங்கினாலும் அதை சாமியார் பெயரிலும், மெட்ரானியார் பெயரிலும், ஊர் பாதுகாவலர் பெயரிலும் பத்திரம் பதிச்சு வச்சாங்க"

வீடுகளை இழந்த மீனவர்கள் வேறு இடங்களில் மாற்று வீடுகள் கேட்டால் அரசு கையை விரிக்கிறது. நானூறு ரூபாயும், பத்து கிலோ அரிசியும் கொடுத்துவிட்டு பாவம் அரசும் அமைதியாகி விடுகிறது.

"பல ஆயிரம் கோடி அந்நியச் செலவாணியை ஈட்டிக் கொடுக்கும் மீனவனுக்கு கடல் அரிப்பில் இழந்த வீடுகளுக்குப் பதிலாக மாற்று வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் காசில்லை"

பாவம் அரசாங்கம்தான் என்ன செய்யும்? இயற்கை பேரழிவு என்றால்தான் மாற்று இடமும், மாற்று வீடும், நிவாரண உதவியும் செய்வார்களாம். கடல் அரிப்பால் பாதிக்கப்படும் வீடுகளைப் பாதுகாக்க எல்லாரும் கடற்கரையில் வந்து சாக்கு மூட்டைகளை அடுக்குவார்கள் இருந்தாலும் இயற்கையின் சீற்றத்தை யாரால் கட்டுப்படுத்த முடியும்? இந்த கடல் அரிப்பிற்கு காரணம் என்ன?

ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான டன் மணல் கம்பெனிகாரன் தோண்டி எடுத்துக் கொண்டு போனா என்ன ஆகும்? நம்ம ஊரில் மட்டுமில்லாமல் நம்ம ஊருபோல ஏழு ஊரில் உள்ள மணலை தினமும் ஆயிரக்கணக்கான டன் கணக்கில்லாமல் தோண்டி எடுத்து கொண்டு போகிறார்கள். அதனால் மணல் தோண்டி எடுத்ததனால் பள்ளம் ஏற்பட்டு அந்த பள்ளத்தை நோக்கி கடல்நீர் பாய்ந்து வருகிறது.

"அரசாங்க மணல் கம்பெனியும், தனியார் மணல் கம்பெனியும் கடற்கரை மணலை அள்ளி கோடி, கோடியாக கொள்ளை அடிக்க நம்மள இப்படி சாகடிச்சுதானுவளே" விஞ்ஞானிகள் அணு உலையினால்

ஆபத்து இல்லை அணுஉலையில் இருந்துவருகின்ற மின்சாரம் பரிசுத்தமானது என்று கூறுகின்றனர். இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இப்படி மணல் கொள்ளை அடித்து மீனவர்களை அழித்ததோடு மட்டுமல்லாமல், விவசாய நிலங்களையும் உப்பாக்கி விவசாயம் செய்ய முடியாமலும், குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லாமலும் செய்கின்றனர். கம்பெனிக்காரர்கள் மணல் கொள்ளை காரணமாக கேன்சர் நோயும் பரவுகிறது. காலங்காலமாக மலைகளில் இருந்து தாதுக்களையும், கனிமங்களையும், ஆற்றுத் தண்ணீர் இழுத்து வந்து கடலில் கொண்டு சேர்க்கிறது. கடல் அந்த தாதுக்களையும், கனிமங்களையும் கடற்கரையில் அடித்து ஒதுக்குகிறது. இப்படி பல ஆண்டுகளாக தேங்கிக் கிடக்கும் மணலில் கதிரியக்கப் பாதிப்புகள் அதிகம் இருக்குமாம். அதனால் ஆல்பா கதிர், பீட்டா கதிர், காமா கதிர் இப்படி கதிரியக்கம் இருக்குமாம். அந்த கதிரியக்கம் மணலுக்குள் இருக்கிறதால் எந்தப் பாதிப்பும் இல்லையாம். அது சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பாக இருக்குமாம். ஒரு சென்டி மீட்டர் மணல் சேர நூறு வருடம் ஆகுமாம்.

அந்த கனிமங்களும், தாதுக்களும் கலந்த மணலைத் தோண்டி எடுக்கும் போது கதிரியக்கம் வெளிப்படும். அது மட்டுமில்லாமல் தோண்டி எடுக்கும் மணலை கம்பெனியில் கொண்டு போய் இல்மனேட், ரூட்டேல், சிலிக்கான், தோரியம், புளூட்டோனியம், மேனோசைட், யுரேனியம், சிர்க்கோனியம், இப்படி பல கனிமங்களாகப் பிரிக்கும் போது அதில் இருந்து கதிரியக்கம் வெளிப்படும். அப்படி வெளியாகக் கூடிய கதிரியக்கத்தால் புற்றுநோய் பரவுகிறது என்று அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள் கூறுகின்றனர்.

புற்றுநோயைக் குணமாக்கவும், வராமல் தடுக்கவும் இந்த மணல் கொள்ளை தடுக்கப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். மீனவ ஊரான பனையூருக்கு சாலை வசதியை உருவாக்கிப் பேருந்து வசதி செய்து கேட்டு இளைஞர்கள் எல்லாம் சேர்ந்து போராடினார்கள். பனையூரில் உள்ள பெரியவர்களும், ஊர்க்கமிட்டிக்காரர்களும் சேர்ந்து செட்டியூருக்கும் பனையூருக்கும் இடைப்பட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை அமைக்க தடம் பிடிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டனர். சாலை அமைக்க ஏற்பாடு செய்த இடம் சாலை புறம்போக்கு இடம் அதன் இரண்டு பக்கமும் தென்னந்தோப்பு வைத்திருந்த மீனவர் அல்லாத மாற்றுச் சமூகத்தினர் ஆக்கிரமிப்பு செய்து அந்த புறம்போக்கு இடங்களில் தென்னை நட்டு காலங்காலமாக அனுபவித்து வந்தனர். அந்த இடங்களை அனுபவித்துக் கொள்ள 2சி பட்டா பெற்று அதன்பலன்களை அனுபவித்து வந்தார்கள். ஊர்க்காரர்கள் அந்த நிலத்தை கைவசம் வைத்திருப்பவர்களிடம் பேசினார்கள். அவர்கள் ஒரு அடி இடம் கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. ஊரிலுள்ள இளைஞர்களெல்லாம் ஒன்று சேர்ந்தனர். இரவோடு இரவாக வேலியின் இரண்டு பக்கமும் எட்டு எட்டு அடி அளந்து அதற்கு இடையில் நின்ற முப்பத்துரண்டு தென்னை மரங்களை கோடாலியால் வெட்டி, வாளால்அறுத்து போலீஸ் வழக்குகளை கடந்து, தடம்பிடித்து, சாலை அமைத்தனர்.

வாய்க்கால் வழி ஓடி வரக்கூடிய நல்ல தண்ணீரில் தெற்குப் பக்க வழி கடல்நீர் கலக்க ஏறி வாய்க்கால் தண்ணீரெல்லாம் உப்பு தண்ணீராக மாறிப்போனது. அதனால் மக்கள் நல்ல தண்ணீரில் குளிக்க வடக்கு பக்கமாக சென்றனர். வடக்கு பக்கத்தவர் அவர்களை தடுக்க, அங்கு அடிதடி ஆனது. இப்பிரச்சனையிலும் இன்னாசி நுழைந்து தீர்வு கண்டான்.

இப்படிப்பட்ட வீரனைப் பற்றி பேசாமல், கேட்காமல் நிர்மலாவால் இருக்க முடியவில்லை. ஊர்த்தலைவரான பேதுருப் பிள்ளையை எதிர்த்து நின்றவனான இன்னாசி மீது ஊர் தலைவரின் மகளான நிர்மலா காதல் வயப்பட்டாள். வீட்டையும், பெற்றோரையும் எதிர்த்து இன்னாசியைக் கைப்பிடித்தாள். தன் காதல் மனைவியின் மீது கைவைத்த சேவியரை கொல்லவே இன்னாசி கடற்கரையில் காத்திருந்தான். ஆனால் கடல் அலைகளில் தன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த சேவியரையும் கரையில் தன் பால்குடி மறவாத பச்சிளம் குழந்தையுடன் ஒவ்வொருவரின் கால்களிலும் விழுந்து தன் கணவரை காப்பாற்றப் போராடிக் கொண்டிருக்கும் சேவியரின் மனைவியான பாத்திமாவை பார்க்கும் போது இன்னாசியின் மனதில் இரக்கம் சுரக்கிறது. கோபம் காணாமல் போனது. காரணமில்லாமல் ஓர் உயிர் போவதை விரும்பாத இன்னாசி அனைத்தையும் மறந்து மானுடமாண்பு மேலோங்க மனதில் ஈரத்துடன் கடலுக்குள் சேவியரை காப்பாற்றுகின்றான்.

மீனவர்கள் முரடர்களாக, கோபக்காரர்களாக, போராட கூடியவர்களாக இருந்தாலும் மனிதநேயம் மிக்கவர்கள் என்பதை இந்நாவல் வழி கூற விழைகிறார் ஆசிரியர் பெர்லின்.